# கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம்

## ஞானஸ்நானத்தின் முக்கியத்துவம் நாமத்திலா? உள்ளான மாற்றத்திலா?

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரலோகத்துக்கு போவதற்கு முன்பு பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கட்டளையிட்டார்.
மத்தேயு 28:19 "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,"
ஆனால் பவுலும் பேதுருவும் இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தார்கள். பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுப்பது சரியா? அல்லது இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுப்பது சரியா? மேலும் பவுலும் பேதுருவும் இயேசு கிறிஸ்துவின் கட்டளையை மீறினார்களா? என்று பலர் கேள்வி கேட்கின்றனர்.திரித்துவத்தை பற்றி சிலர் சரியாக அறிந்து கொள்ளாததால் ஞானஸ்நானத்தை பற்றிய சத்தியத்தை தங்களுக்கு கேடுண்டாக புரட்டுகிறார்கள். முதலாவதாக சத்தியத்தை சரியாக விளங்கி கொள்ள வேண்டும்.

### 1.இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கலாமா?

கொலோசேயர் 2:7ன் படி தெய்வத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீர பிரகாரமாக அவருக்குள் (இயேசு கிறிஸ்துவுக்குள்) வாசமாயிருக்கிறது என்ற வசனத்தின் படியும் கர்த்தத்துவம் அவர் தோளிலிருக்கும் என்ற வசனத்தின் படியும் , இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ் நானம் கொடுப்பதில் தவறில்லை. ஏனென்றால் அவர் சரீர பிரகாரமாக தெய்வத்துவத்தின் பரிபூரணத்தினால் நிரம்பியிருந்தார் மேலும் கர்த்தத்துவம் அவர் தோளில் இருந்தது எனவே இயேசுவின் நாமத்தில் ஞானஸ் நானம் கொடுப்பதில் தவறில்லை.

### 2.ஏன் சீஷர்கள் இயேசுவின் நாமத்தில் கொடுத்தார்கள்?

கர்த்தராகிய, இயேசு கிறிஸ்து மத்தேயு 28:19ல் நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ் நானம் கொடுங்கள் என்றார். அதே, இயேசு கிறிஸ்து லூக்கா 24:47மற்றும் 48ம் வசனங்களில் மனம் திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய (இயேசுவின்) நாமத்தில் பிரசங்கிக்க படவும்வேண்டியது. நீங்கள் இவைகளுக்கு சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்றார். மேல் வீட்டறையில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை பெற்ற சீஷர்கள் முதன் முறையாக நீங்கள் சிலுவையில் அறைந்த இயேசுவை தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார். (அப்போஸ்தலர் 2:36) என்று இயேசுவை தேவன் என்று பிரசங்கிக்க தொடங்கினார்கள். இவர்களின் பிரசங்கத்தை கேட்ட அவர்கள் இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி பேதுருவையும் மற்ற அப்போஸ்தலர்களையும் பார்த்து நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்ட பொழுது பேதுரு அவர்களை

பார்த்து நீங்கள் மனம் திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்று கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள் என்றார். அன்று பிரசங்கத்தை கேட்டு ஞானஸ்நானம் பெற்றவர்கள்அநேகர் யூதர்கள்.அவர்கள் இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை அறியாதவர்கள். பிதாவாகிய தேவனாகிய யஹோவா என்ற நாமத்தை மாத்திரம் அறிந்தவர்கள். பூமியின் மேலேயும் வானத்துக்கு கீழேயும் இரட்சிக்கப்படுவதற்கு இயேசு என்ற நாமத்தை தவிர வேறு நாமம் கொடுக்கப்படவில்லை என்பதை அறியாதவர்கள். மேலும் அவர்கள் இயேசுவை விசுவாசிக்கவே இல்லை. இந்த சூழ்நிலையில் இயேசுவே தேவன் என்று அவர்களை விசுவாசிக்க செய்து பாவ மன்னிப்புக்கென்று இயேசுவின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து அவர்களை இரட்சிப்பின் பாதையில் நடத்தினார்கள்.மேலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு பிதாவாகிய தேவன் சகல அதிகாரங்களையும் கொடுத்துவிட்டார்.(பிலிப்பியர் 1:6:11 பார்க்க) மேலும் பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் மூவரும் ஒன்றாக இருக்கிறார்கள். மூவரும் ஒருவர் என்ற திரியேக சத்தியத்தின் படியும் மேலும் இயேசு தெய்வத்துவத்தின் பரிபூரணத்தினால் நிறைந்திருந்தார் என்ற சத்தியத்தின் படியும் அவர்கள் இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தார்கள். யோவான் 17:3 "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்"

இன்றைக்கு பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரின் நாமத்தை எல்லாரும் அறிந்திருக்கிறபடியினால் இயேசு கிறிஸ்து பரலோகத்துக்கு போவதற்கு முன் சொன்ன கட்டளையாகிய பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினாலே பெரும்பாலோர் ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள்.

## 3.இயேசுவின் கட்டளை மீறப்பட்டதா?

அப்போஸ்தலர்கள் இயேசு கட்டளையிட்ட (பிதா குமாரன் பரிசுத்த ஆவியினால்) ஞானஸ்நானத்தை மீறவில்லை.யோவான் 14:10ல் இயேசு கிறிஸ்து என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்த கிரியைகளை செய்து வருகிறார். 11ம் வசனத்தில் நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருப்பதை நம்புங்கள் என்றார். 23ம் வசனத்தில் ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தை கைக்கொள்ளுவான் அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் (பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர்) அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம். அப்போஸ்தலர் 10:38ல் "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்." எனவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சரீரபிரகாரமா தெய்வத்துவத்தின் பரிபூரணத்தினால் நிரம்பியிருந்ததினால் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுப்பதில் தவறில்லை. இன்றைக்கு பல சபைகளில் இயேசு கிறிஸ்து சொன்ன பிதா குமாரன் பரிசுத்த ஆவியினால் ஞானஸ் நானம் கொடுக்கிறார்கள். அதுவும் தவறில்லை.ஆனால் Jesus only குழுவினர் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் எடுத்தவர்கள் பிசாசின் பிள்ளைகள் அவர்களுக்கு பாவ மன்னிப்பு இல்லை என்ற துர் உபதேசத்தை பரப்புகிறார்கள். யோவான் 12:48

வசனத்தின் படி இவர்கள் இயேசு கிறிஸ்து சொன்ன வசனங்களை ஒப்பு கொள்ளாமல் வேற்றுமையான உபதேசங்களை போதிக்கிறார்கள். யோவான் 12:48 ன் படி என்னை (இயேசு கிறிஸ்து) தள்ளி என் வசனத்தை ஏற்று கொள்ளாதவனை. நான் சொன்ன வசனமே அவனை கடைசி நாள்களில் நியாயம் தீர்க்கும்.
வேதாகமத்தின் அடிப்படை சத்தியமே திரியேகம். இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்த அப்போஸ்தலர்கள் கடைசி வரை பிதாவையும் பரிசுத்த ஆவியானவரையும் முக்கியப்படுத்தினார்கள்.
2கொரிந்தியர் 13:14 "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடும் இருப்பதாக.
இதில் திரியேகத்தின் மூவருக்கும் சம அந்தஸ்து கொடுக்கப்பட்டிருக்கிறது. பல இடங்களில் அப்போஸ்தலர்கள் ஞானஸ்நானம் கொடுத்த போது எந்த நாமத்தில் கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படவில்லை. பவுல் தீமோத்தேயுக்கு விருத்தசேதனம் பண்ணினார். ஏன் பண்ணினார்? எதற்கு பண்ணினார்? எனவே நாமும் பண்ண வேண்டுமா? தேவையில்லாத காரியங்களை போட்டு குழப்பி வேதாகமத்தை புரட்டும் இப்படி பட்ட வஞ்சிக்கப்பட்ட வேத பிரசங்கிகளை விட்டு விலகுங்கள். இயேசு கிறிஸ்து சொன்ன பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்து அவர் நாமத்தை மகிமைபடுத்துவோம். அல்லேலூயா.
ரோமர் 16:17 "அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்."

## 4.நாமமா அல்லது உள்ளான மாற்றமா? ஏது முக்கியம்

தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் என்பது ஒரு சடங்கு அல்ல. அது ஒரு உள்ளான மாற்றத்தை ஏற்படுத்த கூடிய ஒரு அனுபவம். இயேசுவின் நாமத்தினாலோ அல்லது பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் எடுப்பவர்களில் உள்ளான மாற்றம் ஏற்படவில்லையென்றால் ஒரு பிரயோசனமில்லை.
(கலாத்தியர் 3:27)கிறிஸ்துவுக்குள்ளாய் ஞானஸ்நானம் எடுப்பதே பிரதானம். இவர்கள் பரிசுத்த ஆவியானவரால் மனம் புதிதாகுதலினாலே மருரூபமாக்கப்பட்டு தங்கள் சிந்தனைகளில் இயேசுவின் சாயலை பெற்று கொள்கிறார்கள். வசனத்தை நன்றாக படித்து பார்க்கும் போது 2கொரிந்தியர் 5:17 "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின." ஒரு புதிய சிருஷ்டி அதாவது புதிதாக பிறந்த அனுபவத்தை பெற்று கொள்ளுதல்.
கொலோசெயர் 2:12 "ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்."
அடுத்தது ரோமர் 6ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டது போல அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுவதின் அனுபவம்.
ரோமர் 6:3-5, 11 "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற

நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீகளா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்." கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் என்பது நாமத்தில் அல்ல அதாவது கிறிஸ்துவுக்குள் அடக்கம் பண்ணப்பட்டு அவருடைய உயிர்தெழுதலின் சாயலில் இணைக்கப்பட்டு புதிய சிருஷ்டியாக அதாவது விசுவாசத்தினாலே பாவத்துக்கு மரித்து நீதிக்கு பிழைக்கும் புதிதாக பிறக்கும் அனுபவம் அதாவது எல்லாம் புதிதாகின என்ற மருரூபம். பாவத்துக்கு மரித்து நீதிக்கு பிழைத்து தேவனோடு பண்ணும் மனசாட்சியின் உடன்படிக்கை. ஞானஸ்நானம் எடுக்கும் போது இதை பரிசுத்த ஆவியானவரே நம்மில் செயல் படுத்துகிறார். அல்லேலூயா.

தீத்து 3:5 "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்." இது இரட்சிப்பின் அடுத்த பரிமாணம். இன்றைக்கு எந்த நாமத்தில் ஞானஸ்நானம் கொடுப்பது என்று தர்கிப்பதில் ஒரு பிரயோஜனம் இல்லை.தர்கிப்பவர்கள் தங்கள் உபதேசத்தையே நேசித்து அதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இப்படி உள்ளான ஒரு மாற்றம் ஏற்படவில்லையென்றால் அது ஒரு வெளிப்புறமான சடங்காக தான் இருக்கும். அதாவது இயேசு சொன்னப்படி மாயக்காரனே போஜன பாத்திரத்தின் வெளிப்புறத்தை சுத்தமாக்குகிறாய் உட்புறத்திலோ கொள்ளையினாலும் அநீயாய த்தினாலும் நிறைந்திருக்கிறது என்பதாகும். இன்றைக்கு ஞானஸ்நானம் எடுப்பவர்கள் இயேசு கிறிஸ்து கட்டளையிட்டது போல சீஷனாகி அதாவது சுயத்துக்கு மரித்து ஞானஸ்நானம் எடுக்காமல் ஒரு சடங்காசாரத்துக்கு எடுப்பதால் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளை போல தன் வாழ்கிறார்கள். ஞானஸ்நானம் எடுக்கும் போது பரிசுத்த ஆவியானவருக்கு உங்களை ஒப்பு கொடுங்கள். இன்றைக்கு மாயமாலக்காரர்கள் தங்கள் உபதேசத்துக்கு ஒத்த வேஷம் தரித்து நாமத்தை வைத்து தர்கம் பண்ணி வேதாகமத்தை புரட்டுகிறார்கள்

யூதா 4 "ஏனெனில் நமது தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டி, ஒன்றான ஆண்டவராகிய தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் மறுதலிக்கிற பக்தியற்றவர்களாகிய சிலர் பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள்; அவர்கள் இந்த ஆக்கினைக்குள்ளாவார்களென்று பூர்வத்திலே எழுதியிருக்கிறது."

இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்ற மாய வித்தைகாரன் பணத்தை கொடுத்து பரிசுத்த ஆவியின் வரத்தை பெற முயற்சித்தான். எனவே இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் எடுக்கும் போது மாத்திரமே உள்ளான மாற்றம் ஏற்படும் என்று . இயேசு நாமக்காரர்கள் சொல்வது முற்றிலும் தவறு. ஞானஸ்நானம் எடுக்கும் போது பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்ய வேண்டும்.

## 5.இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் எடுத்தால் மாத்திரம் தான் வரம்

கிடைக்குமா?
இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் எடுத்தால் பரிசுத்த ஆவியின் வரத்தை பெற்று கொள்வீர்கள் என்று பேதுரு சொன்னதை வைத்து சிலர் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் எடுத்தவர்களுக்கு தான் உண்மையான வரம் கிடைக்கும் மற்றதெல்லாம் போலி என்று வசனத்தை புரட்டுகின்றனர்.
வேதாகமத்தில் ஞானஸ்நானத்தை பெறுவதற்கு முன்பாகவே பரிசுத்தாவியின் வரத்தை பெற்று கொண்டதற்கு அநேக உதாரணங்களை சொல்லலாம்.
அப்போஸ்தலர் 10ம் அதிகாரத்தில் கொர்னலியு வீட்டில் ஞானஸ்நானம் கொடுப்பதற்கு முன்பே பரிசுத்த ஆவியானவரின் வரம் கொடுக்கப்பட்டது
அப்போஸ்தலர் 10:46-47 "பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் வசனத்தை கேட்டபோது, பரிசுத்தஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக்குறித்துப் பிரமித்தார்கள். அப்பொழுது பேதுரு:
நம்மைப்போலப் பரிசுத்தஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி,"
அப்போஸ்தலர் 8:15ல் "இவர்கள் வந்த பொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாக கண்டு" 16 ம் வசனத்திலே இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்ற பிறகு பரிசுத்த ஆவியை பெற்று கொள்ளவில்லை என்று கண்டு,அங்கு பவுல் கைகளை வைத்த போது பரிசுத்த ஆவியின் வரத்தை பெற்று கொண்டார்கள் (அப்போஸ்தலர் 19:6).
இயேசுவன் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்ற மாயவித்தை காரன் பணத்தினால் பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவதற்கு முயற்சித்தான். அப்போஸ்தலர் 8:20-21 "பேதுரு அவனை நோக்கி: தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்கு முன்பாக செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை." இதிலிருந்து ஞானஸ்நானம் பெறும் போது உள்ளான மற்றம் ஏற்பட வேண்டியது அவசியம்.
ஆவிக்குறிய வரங்களை பிதா குமாரன் பரிசுத்தஆவியானவரே கொடுக்கிறார்கள் என்பதை கீழ்கண்ட வசனங்களினால் அறிந்து கொள்ளலாம். பிதா வரத்தை கொடுக்கிறார் யாக்கோபு 1:17 "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது;
எபேசியர் 1:17 "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத்தந்தருளவேண்டுமென்று,"
பரிசுத்தஆவியானவர் வரங்களை கொடுக்கிறார் 1 கொரிந்தியர் 12:11 "இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்."
இயேசு கிறிஸ்து வரங்களை கொடுக்கிறார் எபேசியர் 4:8 "ஆதலால், அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களை சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார்."
1கொரிந்தியர் 12:31ல் முக்கியமான வரங்களை நாடுங்கள் என்று பவுல் சொன்னாலும் 13ம் அதிகாரத்தில் அன்பு எனக்கிராவிட்டால் சத்தமிடுகிற வெண்கலம் போல இருப்பேன் என்று அன்பே பிரதானம் என்கிறார். வரங்களினால்

அல்ல கனிகளினால் தான் அவர்களை அறிவீர்கள் என்று வசனம் நம்மை எச்சரிக்கிறது.
யோவான் 7:38-39 " என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஒடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிசொன்னார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்று கொள்வார்கள் என்று இயேசு சொன்னார். லூக்கா 11:13 "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்று இயேசு சொன்னார் எனவே ஞானஸ்நானம் எடுத்தால் மாத்திரம் ஆவியின் வரம் கிடைப்பதில்லை என்று வேதாகமத்தின் மூலமும் அனுபவங்கள் மூலமும் தெரிந்து கொள்ளலாம். பேதுரு அப்போஸ்தலர் 2:38ல் தேவ கட்டளைக்கு கீழ்படியும் போது நாம் எல்லாவிதமான ஆவிக்குறிய உலகத்துக்குறிய ஆசீர்வாதங்களை தெவனிடம் இருந்து பெற்று கொள்ள முடியும்.உதாரணமாக யோவான் 14:23ல் "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்."
எபேசியர் 1:13 "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்."
எனவே தேவ நீதிக்கு கீழ்படியும் போது நாம் பரிசுத்த ஆவியின் வரத்தை தேவனிடமிருந்து பெற்று கொள்ளமுடியும்.இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் எடுத்தால் மாத்திரம் பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவார்கள் என்று இயேசு நாமக்காரர்கள் தங்கள் உபதேசத்துக்காக வேத வசனத்தை புரட்டுகிறார்கள்.

## 6.இயேசுவின் நாமத்தினால் மாத்திரம் நோய் குணமாகும் பிசாசு ஒடும் எனவே ஞானஸ்நானமும் இயேசுவின் நாமத்தினால் தான் கொடுக்க வேண்டுமா?

இது தவறான விளக்கம். வரங்களையும் அதிகாரங்களையும் தேவனே அருளுகிறார், இயேசு தன் சீஷர்களுக்கு வரங்களையும் அதிகாரங்களையும் கொடுத்து ஊழியத்துக்கு அனுப்பினார். என் நாமத்தினாலே பிசாசுகளை துரத்துவீர்கள், நோய்களை குணமாக்குவீர்கள் என்று இயேசு சொன்னார். ஆனால் வேதாகமத்தில் அதிகாரங்களை பெற்றவர்கள் தான் இயேசுவின் நாமத்தினால் பிசாசுக்களை துரத்தினார்கள். இன்றைக்கு கூட சாதாரண விசுவாசிகள் தேவனிடமிருந்து அதிகாரங்களை பெற்று பிசாசுகளை துரத்துகிறார்கள். அப்போஸ்தலர் 19:13-17ம் வசனங்களில் பிரதான ஆசாரியனுடைய குமாரர்கள் 7 பேர் இயேசுவின் நாமத்தினாலே அசுத்த ஆவிகளை துரத்த முயன்ற போது அந்த பொல்லாத ஆவி அவர்களை நோக்கி இயேசுவை அறிவேன் பவுலையும் அறிவேன் நீங்கள் யார் என்று சொல்லி அவர்கள் மேல் பாய்ந்து பலாத்காரம் பண்ணி அவர்களை மேற்கொள்ள அவர்கள் நிர்வாணிகளும் காயப்பட்டவர்களாகவும் ஒடினார்கள். பூமியின் மேல் மனுஷருக்கு அதிகாரத்தை கொடுப்பவர் தேவனே யோபு 34:13,"பூமியின்மேல்

மனுஷனுக்கு அதிகாரம் கொடுத்தவர் யார்? பூச்சக்கரம் முழுதையும் ஒழுங்குப்படுத்தினவர் யார்? எனவே தேவ வல்லமை இல்லாமல் பிசாசுக்களை இயேசுவின் நாமத்தினாலே துரத்த முடியாது. ஞானஸ்நானம் என்பது உள்ளான மாற்றம், மனம் புதுதாகுதல், பாவத்துக்கு மரித்து நீதிக்கு பிழைப்பது புதிய சிருஷ்டியாவது என்ற அனுபவம்.
உள்ளான மாற்றம் இல்லாத நிலையில் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் அல்லது இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் எடுப்பதில் பிரயோஜனமில்லை. எந்த நாமத்தில் ஞானஸ்நானம் எடுத்த பிறகு உலக பிரகாரமாக வாழ்வதில் ஒரு பிரயோஜனமில்லை. எனவே கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் எடுப்பவர்கள் மாத்திரம் உள்ளான மாற்றத்தை பெற்று அவரை தரித்து கொண்டு அவருடைய சாயலாய் மறுரூபமடைவார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் அதிகாரத்தை பெற்று கொள்ளாமல் அல்லது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை பெற்று கொள்ளாமல் யாரும் இயேசுவின் நாமத்தினாலே பிசாசுகளை துரத்த முடியாது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிலாத்துவிடம் பரத்திலிருந்து உனக்கு கொடுக்கபட்டாலோழிய என் மேல் உனக்கு எந்த அதிகாரமும் இல்லை எனறார் எனவே அதிகாரங்களை தேவனே தருகிறார்.

## 7.விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்.

மாற்கு 16:16 "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்." இரட்சிக்கப்படுவதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்ட சிறைசாலை தலைவனை நோக்கி பவுல் சொன்ன வார்த்தை, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்றார். ரோமர் 3:24-26.கிருபையினாலே விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப்படுவீர்கள் என்று வசனம் சொல்கிறது (எபேசியர் 2:8)
ரோமர் 10:9-10 மனம் திரும்பிய பின்பு தேவனிடமிருந்து மன்னிப்பை பெற்று கொள்வதற்கு விசுவாசமே அடிப்படை தேவையாயிருக்கிறது. பாவத்திலிருந்தும் நரகத்திலிருந்தும் இரட்சிப்பை அடைவதற்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் தவிர வேறொரு நாமம் கொடுக்கப்படவில்லை. இதன் அர்த்தம் யாதெனில் நீங்கள் அவரை உங்கள் ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்று கொள்ள விரும்பினால். ஒரு திருமணத்தில் சம்பவிப்பது போல எல்லாவற்றையும் விட்டு விட்டு அவரை மாத்திரமே பற்றி கொள்ளும் அனுபவம். ஒரு மணப் பெண்ணை போல கிறிஸ்துவை ஏற்று கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்துவை நோக்கி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே நான் ஒரு பாவி நான் மெய்யாகவே என்னுடைய எல்லா பாவங்களிலிருந்தும் திரும்ப விரும்புகிறேன். நீர் என்னுடைய எல்லா பாவங்களுக்காகவும் மரித்து மரணத்திலிருந்து உயிரோடு எழும்பி இன்றும் உயிரோடு இருக்கிறீர் என்பதை நான் விசுவாசிக்கிறேன். தயவு செய்து என்னுடைய எல்லா பாவங்களையும் எனக்கு மன்னியும். என்னுடைய இருதயத்துக்குள்ளும் ஜீவியத்துக்குள்ளும் தயவாய் வந்து என் முழு வாழ்க்கையிலும் இன்றிலிருந்து நீரே ஆண்டவராய் இருந்தருளும் என்று விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும். இந்த ஜெபம் ஒரு மந்திரமல்ல உங்கள் இருதயத்தில் உண்மை நிலையிலும், மெய்யான விசுவாசத்தையும் பொறுத்தே இருக்கிறது. இருதயத்தில் உண்மையில்லாமல் ஜெபித்திருந்தால் நீங்கள் எந்த மாற்றமும் அடையாமல் அப்படியே இருப்பீர்கள்.

இந்த அனுபவத்தில் நாம் மெய்யாகவே மன்னிக்கப்பட்டு தேவனால் ஏற்று கொள்ளபட்டிருக்கிறோம் என்ற நிச்சயமும் நம்மை அவர் தம்முடைய பிள்ளைகளாய் ஏற்று கொண்டு விட்டார் என்ற நிச்சயமும் மிகவும் முக்கியமானதாகும். தேவன் இந்த நிச்சயத்தை பரிசுத்த ஆவியின் மூலமாய் தருகிறார். இதற்கு பின்பு நீங்கள் கிறிஸ்துவோடு கொண்டுள்ள உறவை ஞானஸ்நானத்தின் மூலமாக அறிக்கை செய்ய வேண்டும். இரட்சிப்பின் முதல் பகுதி பாவங்களிலிருந்து மன்னிக்கப்படும் படி கிரியை செய்கிறது இதன் மூலம் கடந்த குற்றங்கள் நம்மை விட்டு நீங்கி விடுகின்றன இன்னமும் நீங்கள் பூரணம் அடைந்து விடவில்லை. இப்பொழுது உங்கள் ஜீவியத்தின் திசையை திருப்பி விட்டீர்கள் ஆனால் இது மாத்திரம் போதாது இனி வரும் காலத்திலிருந்து ஒரு உத்தமமான வாழ்க்கை வாழ இன்னமும் தேவனிடத்திலிருந்து உதவி தேவையாயிருக்கிறது இதற்க்காகவே தேவன் தம்முடைய வல்லமையை தருகிறார்.
தேவ வசனம் இரட்சிப்பு உண்டாவதற்க்கு தேவ பெலனாயிருக்கிறது ரோமர் 1:16. சத்திய ஆவியானவரே சகல சத்தியத்துக்குள்ளும் நம்மை நடத்துவார். அல்லேலூயா. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்லும் போது நாம் நம்முடைய ஜீவியத்தில் தேவனுக்குறியவைகளை முதலாவது தேடும் போது இப்பூமிக்குரிய வாழ்வுக்கு தேவையான எல்லாவற்றையும் தேவன் சேர்த்து தருகிறார். இதுதான் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் எடுப்பவர்கள் இரட்சிப்பை பெற்று கொள்ளும் அனுபவம். இது முழுக்க முழுக்க இருதயத்தின் விசுவாசத்தினாலும் இயேசுவின் கிருபையினாலும் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதாலும் ஏற்படுகிறது. வெறும் ஞானஸ்நானம் எடுப்பதில் மாத்திரமல்ல.இதற்க்கு உதாரணமாக எத்தியோப்பிய மந்திரிக்கு பிலிப்பு ஞானஸ்நானம் கொடுப்பதை காணலாம்.
அப்போஸ்தலர் 8:36, 37, 38ம் வசனங்களில் தண்ணீர் இருக்கிறதே நான் ஞானஸ்நானம் பெறுவதற்கு தடையென்ன என்று கேட்ட எத்தியோப்பிய மந்திரியை பார்த்த பிலிப்பு நீர் முழு இருதயத்தோடு விசுவாசித்தால் தடையில்லை என்றார். அதற்கு அந்த மந்திரி இயேசு கிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி ஞானஸ்நானத்தை பெற்று கொண்டான். அங்கு பரிசுத்த ஆவியானவரும் பிலிப்புடனே இருப்பதை காணலாம். எனவே விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொன்னபடி விசுவாசத்துடனே சத்தியத்துக்கு கீழ்படிந்து இரட்சிப்பின் ஆசீவாதங்களை நாம் பெற்று கொள்ள வேண்டும்.

## 8அப்போஸ்தலர் 19ம் அதிகாரத்தின் படி இயேசு நாமக்காரர்கள் மீண்டும் ஞானஸ்நானம் கொடுக்கிறார்களே?

அப்போஸ்தலர் 19ம் அதிகாரத்தில் பவுல் சில சீஷர்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தை பெற்றவர்கள் என்று காண்கிறான். அவர்கள் எந்த நாமத்தினாலும் ஞானஸ்நானம் பெறவில்லை. இரட்சிப்பின் சத்தியத்தை பற்றிய அறிவே அவர்களிடம் இல்லை.அப்போஸ்தலர் 19:2 பரிசுத்த ஆவியானவர் தான் சகல சத்தியத்துக்குள்ளும் நம்மை நடத்துவார் எனவே தான் பவுல் அவர்களுக்கு சத்தியத்தை சொல்லி இரட்சிப்புக்குள் நடத்தி மீண்டும் ஞானஸ்நானம் கொடுக்கிறார்.அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொன்னது போல சீஷனாக்கி ஞானஸ்நானம் கொடுங்கள் என்ற வசனத்தின் படி அவர்களை நடத்தினார்கள்.

யோவான் 8:31 "இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை பார்த்து: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்"என்று சொன்னார். இன்றைக்கு பல சபைகளில் இரட்சிப்புக்குள் ஜனங்களை நடத்தாமல் அதாவது இரட்சிப்பை பற்றி அறிந்து கொள்ளாதவர்களுக்கு,இரட்சிக்கபடாதவர்களுக்கு பாவமன்னிப்பின் நிச்சயத்தை பெறாதவர்களுக்கு, எண்ணிக்கைக்காக ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள். இவர்களுக்கு ஆவிக்குறிய சபைகளில் மறுபடியுமாய் அவர்களை இரட்சிப்புக்குள் நடத்தி மீண்டும் ஞானஸ்நானம் கொடுப்பதை காணலாம். இயேசு நாமக்காரர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொன்ன பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரின் நாமத்தில் ஞானஸ்நானம் எடுத்தவர்களை வஞ்சித்து மீண்டும் இவர்களுக்கு இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள். இதற்கு இவர்கள் காட்டும் வேத பகுதி அப்போஸ்தலர் 19ம் அதிகாரம். இங்கு அந்த சீஷர்கள் சத்தியத்தை அறியாமல் சாதாரணமாக ஞானஸ்நானம் பெற்றிருந்ததால் பவுல் அவர்களுக்கு மறுபடியும் ஞானஸ்நானம் கொடுக்கிறான். இயேசு நாமக்காரர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொன்ன பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் பிசாசின் பிள்ளைகள் இவர்களுக்கு பாவமன்னிப்பு இல்லை என்று வேதாகமத்தை புரட்டுகிறார்கள். வானத்தையும் பூமியையும் படைத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்ன வார்த்தையை மறுதலிக்கும் இவர்கள் வஞ்சிக்கப்பட்டவர்கள்.1கொரிந்தியர் 1:17ல் பவுல் ஞானஸ்நானத்தை கொடுக்கும் படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை சுவிசேஷத்தை பிரசங்கிக்கவே என்னை அனுப்பினார் என்று தேவ வசனத்தை போதிப்பதையை முதன்மையாக சொல்கிறார். பவுல் தீமோத்தேயுக்கு விருத்தசேதனம் பண்ணினாரே அதனால் நீங்களும் விருத்தசேதனம் பண்ணுவீர்களா? பேதுரு பவுலின் உபதேசங்களை பற்றி சொல்லும் போது 2பேதுரு 3:16 "எல்லா நிருபங்களிலும் இவைகளைக் குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்."

## 9.இயேசுவின் நாமம் என்று சொல்லி கொண்டு வசனத்தை புரட்டுகிற இவர்கள் வரலாறு.

1யோவான் 2:22 "இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து."
இயேசு நாமக்காரர்கள் அதாவது ஜெசுஸ் ஒன்லி என்ற போர்வையில் இன்றைக்கு அநேகரை வஞ்சிக்கும் படி தீவிரித்து வருகிறார்கள். இயேசு ஒருவரே திரித்துவம் என்பது இல்லை என்று சொல்லி கொண்டு பிதாவையும், பரிசுத்த ஆவியானவரையும் மறுதலிக்கிறார்கள். இவர்களுடைய உபதேசம் ஒரு மனிதனால் உருவாக்கப்பட்டது. வில்லியம் பிரஹாம் என்ற அமெரிக்காவை சேர்ந்த இவருக்கு ஒரு தூதன் மூலமாய் வெளிப்படுத்தபட்டது என்று சொல்கிறார்கள். அநேக அற்புதங்களை செய்த அவர் கடைசியில் தன்னை நான் தான் கிறிஸ்து என்று சொல்லி கொண்டார். இறுதியில் மிகவும் பின் வாங்கி போய் மரணத்தை தழுவினார். மத்தேயு 24:24ல் கள்ள கிறிஸ்துக்களும் கள்ள தீர்க்கதரிசிகளும் எழும்பி கூடுமானால் தெரிந்து

கொள்ளபட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்வார்கள் என்று இயேசு சொன்னார்.
2கொரிந்தியர் 11:14-15 "அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே; அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத்தக்கதாயிருக்கும்
கலாத்தியர் 1:8-9 "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்."
மேற் சொன்ன வசனங்களிலிருந்து வானத்திலிருந்து வருகிற தூதன் அதாவது ஒளியின் தூதனை தரித்து கொண்ட வானமண்டலத்திலுள்ள தள்ளபட்ட தூதர்களில் ஒருவனால் ஆளுகை செய்யப்பட்டவர் தான் பிரஹாம் என்பவர்.
இவர் இத்தகய வஞ்சிக்கப்பட்ட உபதேசத்தை பரசங்கித்து அநேகரை வஞ்சித்திருக்கிறார். இந்த குழுவினர் இவரது உபதேசத்தையே தொடர்ந்து கேட்டு பிரசங்கிக்கிறார்கள் தேவனை ஆராதித்த லூசிபர் பெருமையினால் தேவனுக்கு ஒப்பாய் தன்னை உயர்த்தி கொண்டதினால் தேவனால் கீழே தள்ளப்பட்டு பிசாசாய் முடிவடைந்தான். அதே போல அநேக அற்புதங்களை செய்த இவரும் பெருமையினாலே தன்னை கிறிஸ்து என்று சொல்லி கொண்டார். இவர் மீண்டும் வருவதாக இக்குழுவினரில் பலர் சொல்கின்றனர். இவரே கிறிஸ்து பிரஹாம் என்று சொல்லி கொள்கின்றனர். ஒளியின் தூதனின் வேஷத்தை தரித்து கொண்ட சாத்தானால் கொண்டு வரப்பட்ட அநேக வஞ்சக உபதேசங்களும் மதங்களும் இந்த உலகில் இருக்கின்றன. இவர்கள் இயேசுவின் நாமம் என்று சொன்னாலும் உண்மையில் இயேசுவை விட தங்கள் உபதேசத்தையே நேசித்து அதை முன் நிறுத்துகிறார்கள். வேதாகமத்தை புரட்டி அநேக கட்டு கதைகளை சொல்கிறார்கள் காயின் ஆதாமுக்கு ஏவாளுக்கும் பிறந்தவன். இயேசு கட்டளையிட்ட பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவா்ன் நாமத்தில் ஞானஸ்நானம் எடுப்பவர்களுக்கு பாவ மன்னிப்பு கிடையாது என்று மற்ற சபையினரை தரக்குறைவாக பேசுகிறார்கள். இந்த குழுவினரை சேர்ந்தவர்கள் மற்ற ஊழியக்காரர்களை கடுமையாக தூசிக்கிறார்கள். இவர்களுடைய முக நூல்களிலும் பிரசங்கங்ளிலும் பேச்சுகளிலும் பிற ஊழியக்காரர்களை குற்றம் சுமத்தும் காரியங்களே மேலோங்கி நிற்கிறது. பிசாசு இவர்களை நியாயாதிபதி ஸ்தானத்தில் உக்கார வைத்து அநேகரை நியாயம் தீர்க்கும்படி செய்கிறான்.
யாக்கோபு 4:11 "சகோதரரே, ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள்; சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, தன் சகோதரனைக் குற்றப்படுத்துகிறவன் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய்ப் பேசி நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துகிறான்; நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துவாயானால், நீ நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவனாயிராமல், அதற்கு நியாயாதிபதியாயிருப்பாய்.
வெளிப்படுத்தின விசேஷம் . 12:10ன் படி சகோதரர் மேல் குற்றஞ் சுமத்தும் பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் என்று பிசாசை பற்றி சொல்லபட்டிருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.
கலாத்தியர் 1:11-12ல் பவுல், என்னுடைய சுவிசேஷம் ஒரு மனுஷனால்

பெற்றதுமில்லை மனுஷனால் கற்றதுமில்லை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே அதை வெளிப்படுத்தினர் என்றார். மனுஷன் மூலம் சாத்தான் கொடுத்த உபதேசத்தை வைத்து மனிதர்களை வஞ்சிக்கும் இத்தகய வஞ்சிகப்பட்ட உபதேசத்தை கொண்டு வருகிறவர்களை விட்டு விலகி ஒடுங்கள்.
ரோமர் 16:17 அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.
கலாத்தியர் 1:9 முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.
பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெறுவதும் விசுவாசிகள் பெறும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் தேவ வல்லமையை பிசாசின் கிரியைகள் என்று இயேசு நாமக்காரர்கள் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கும் தேவ வல்லமையையே தூசிக்கிறார்கள்.
மத்தேயு 12:31-32 "ஆதலால், நான் உங்களுக்கு சொல்லுகிறேன்: எந்தப்பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்: ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை. எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை." இவர்கள் கூடுமானவரை தெரிந்து கொள்ளபட்டவர்களை வஞ்சிக்கிறார்கள் அவர்களிடம் போய் தர்கிக்கிறார்கள்.இவர்கள் அநேகரை குழப்பி வஞ்சித்து மீண்டும் இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள். இந்த கூட்டத்தினால் வஞ்சிக்கபட்ட ஒருவர் சொன்னார். நான் ஒழுங்காக சபைக்கு போய் கொண்டிருந்தேன் இவர்கள் என்னை குழப்பி நீ இயேசுவின் நாமத்துனாலே ஞானஸ்நானம் எடுத்தால் புதிய power கிடைக்கும் என்று சொல்லி எனக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள். எனக்கு ஒரு power - ம் கிடைக்கவில்லை. மேலும் மிகவும் பின்வாங்கி போய் விட்டேன். இந்த கூட்டத்தில் போன பிறகு தான் நான் வஞ்சிக்கப்பட்டதை உணர்ந்து கொண்டேன். இப்பொழுது மீண்டுமாய் பழைய சபைக்கு போய் கொண்டிருக்கிறேன் என்றார்.
1 தீமோத்தேயு 4:1 ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள்.
எனவே பிரியமானவர்களே வேதாகமத்தை படித்து சத்தியத்தை தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கும் சத்தியத்தை தெளிவாக சொல்லி கொடுங்கள். திரியேக தேவன் என்ற ஒரே தேவன் வேதாகமத்தின் அடிப்படை சத்தியம்.அது பிதாவின் ஆதினத்துக்கு அடுத்தது.அதற்கு விரோதமாக தீவிரித்து வர கூடிய வஞ்சக போதனைகளுக்கு உங்களை விலக்கி காத்து கொள்ளுங்கள்.

**10.முதலாவதாக திரித்துவத்தை பற்றி சரியாக விளங்கி கொள்ள வேண்டும்.**
1கொரிந்தியர் 8:6 "பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து

என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்."
எபிரெயர் 1:2 "இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரை சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்."
யோவான் 1:18 " தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்."
1யோவான் 5:7 "(பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்;"
1யோவான் 1:1 " ஆதி முதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்."
யோவான் 1:2,3,14 "அவர் ஆதியிலே தேவனோடுருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நம்க்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது."
யோவான் 15:26 " பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்து சாட்சி கொடுப்பார்."
யோவான் 17:3 "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்"
யோவான் 3:35,36 "பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜிவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன் மேல் நிலைநிற்கும் என்றான்."
லூக்கா 4;41 " பிசாசுகளும்: நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று சத்தமிட்டு, அநேகரைவிட்டுப் புறப்பட்டது. அவரைக் கிறிஸ்து என்று பிசாசுகள் அறிந்திருந்தபடியால் அவர் அவைகளைப் பேசவொட்டாமல் அதட்டினார்."
ஆதியாகமம் 2:27ல் தேவன் தம்முடைய சாயலாக மனிதனை சிருஷ்டித்தார். தேவனுடைய திரித்துவத்தின் சாயல் மனிதனிடம் காணப்படுகிறது. மனித சாயல் என்பது ஆவி ஆத்துமா சரீரம் என்ற மூன்று சாயலாகும் மூன்றும் ஒன்றயிருக்கிறது. தெய்வத்துவத்திலும் மூன்று நபர்கள் உள்ளனர். மூவரும் ஒரே தன்மையும் ஒரே மனமும் ஒற்றுமையும் உடையவர்கள். தனித்தனியே ஒவ்வொருவரையும் தேவன் என்றும் கர்த்தர் என்றும் அழைக்கலாம் மூவரையும் சேர்த்து தேவன் என்றும் கர்த்தர் என்றும் அழைக்கலாம்.வேதாகமத்தில் பல பகுதிகளில் ஒரே தேவன் என்றும் ஒரே தெய்வத்துவமாகிய பிதா குமாரன் பரிசுத்த ஆவியை குறிக்கிறது என்பதாகும் மூவரையும் சேர்த்து தேவன் என்று கூறும் ஏராளமான பகுதிகள் வேதாகமத்தில் உண்டு. தனித்தனியாக தேவன் என்று கூறப்பட்ட பகுதிகளும் உண்டு. 2கொரிந்தியர் 13:14ல் பவுல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் பிதாவும் பரிசுத்த ஆவியானவரும் உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக என்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து யோவான் 14:23ல் " இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்,

அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்." என்றார்.
1கொரிந்தியர் 12:4-6 "வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே." பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் என்ற மூன்று நபர்கள் இருப்பது உண்மையே, ஆனால் தேவன் ஒருவரே கர்த்தர் ஒருவரே என்று வேதம் கூறுவதும் உண்மையே. இதன் நுணுக்கங்கள் மனிதனின் அறிவுக்கு அப்பாற்பட்டவை. திரித்துவத்தை மனிதனின் ஆவியினால் அறிந்து கொள்ளமுடியாது.
மறைவானவைகள் நம் கர்த்தருக்கே உரியவைகள் உபாகமம் 29:29.
அப்போஸ்தலர் 5ம் அதிகாரத்தில் பேதுரு அனனியாவை பார்த்து பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி சாத்தான் உங்கள் இருதயத்தை நிரப்பினான் என்று சொல்லி விட்டு. 4ம் வசனத்திலே நீ மனுஷனிடத்தில் அல்ல தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்றார். இந்த இடத்தில் பரிசுத்த ஆவியானவர் தேவனுக்கு ஒப்பிட்டு சொல்லப்படிருக்கிறார். மனுஷகுமாரனுக்கு விரோதமாய் கூறப்பட்ட தூஷணம் மன்னிக்கப்படும் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாய் கூறப்பட்ட தூஷணம் இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கபடாது என்று இயேசு சொன்னார். திரித்துவம் அதாவது திரியேக தேவன் என்பது தெய்வீக ரகசியம் அது மனித அறிவுக்கு அப்பாற்பட்டது, அது பிதாவின் ஆதீனத்துக்கு அடுத்தது அதை உலக உறவுகளுக்கு ஒப்பிடமுடியாது. 1யோவான் 2:22 பிதாவையோ, இயேசு கிறிஸ்துவையோ யாரை மறுதலித்தாலும் அது அந்தி கிறிஸ்துவின் ஆவி எனவே பிதாவையோ இயேசு கிறிஸ்துவையோ, பரிசுத்த ஆவியானவரையோ மறுதலிக்கிறவர்களை குறித்து எச்சரிக்கையாக இருங்கள்.
ரோமர் 16:17 "அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்."
மத்தேயு 28:19-20 "ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானங்கொடுத்து. நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்: இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்.
2 கொரிந்தியர் 13:1 கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.